# சமஸ்கிருதம் உலகின் பழமையான மொழிகளில் ஒன்று

## ஆந்திர கவர்னர் பேச்சு

திருப்பதி, ஜூலை.16-
சமஸ்கிருதம் உலகின் பழமையான மொழிகளில் ஒன்றாகும், என ஆந்திர மாநில கவர்னர் பேசினார்.

சு.நந்தராஜ்

மத்திய கலாசார அமைச்சகம், டெல்லி சாகித்ய அகாடமி, திருப்பதி தேசிய சமஸ்கிருத பல்கலைக்கழகம், மைசூர் கலாசார அறக்கட்டளை ஆகியவை இணைந்து திருப்பதியில் உள்ள தேசிய சமஸ்கிருத பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் மற்றும் கணினி அறிவியல், சுகாதார அறிவியல், யோகா பற்றிய கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்தது.

நேற்று முன்தினம் நடந்த கருத்தரங்கில் ஆந்திர மாநில கவர்னர் அப்துல்நசீர் பங்கேற்றுப் பேசினார்.

அவர் பேசியதாவது:-

### தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது

ஆன்மிக நகரமான திருப்பதியில் தேசிய சமஸ்கிருதப் பல்கலைக்கழகம் மற்றும் மைசூர் கலாசார அறக்கட்டளை ஆகியவை இணைந்து சமஸ்கிருதம் தொடர்பான கருத்தரங்கை நடத்தியதற்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். சமஸ்கிருதம் உலகின் பழமையான மொழிகளில் ஒன்றாக அறியப்படுகிறது. இன்றும் எனது சொந்த மாநிலமான கர்நாடகத்திலும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள 5 கிராமங்களிலும் சமஸ்கிருதம் முக்கியமான மொழியாக உள்ளது.

நமது அரசியலமைப்பில் இந்தியாவின் 22 அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாக இருக்கும் சமஸ்கிருதம், மற்ற இந்திய மொழிகளான இந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் போன்றவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

### புனிதமான மொழியாகும்

சமஸ்கிருதத்தை வளர்க்கும் பணியில் திருப்பதியில் ஸ்ரீவெங்கடேஸ்வரா வேத பல்கலைக்கழகம், தேசிய சமஸ்கிருத பல்கலைக்கழகம் என 2 புகழ் பெற்ற சமஸ்கிருத உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளன. மகாத்மா காந்தி ஒருமுறை சமஸ்கிருதத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசுகையில், சமஸ்கிருதத்தைப் படிக்காமல் ஒரு இந்தியர் எதையும் கற்றுக்கொள்ள முடியாது, எனத் தெரிவித்துள்ளார்.

எனவே சமஸ்கிருதம் உலகின் பழமையான மொழிகளில் ஒன்றாகும். சமஸ்கிருதம் இல்லாமல் கலாசாரம் இல்லை. இந்தியாவில் உள்ள பல மொழிகளில் சமஸ்கிருதம் மிகவும் புனிதமான மொழியாகும். கருத்தரங்கில் பங்கேற்ற அனைத்துச் சிறந்த சமஸ்கிருத அறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

இவ்வாறு கவர்னர் பேசினார்.

கருத்தரங்கில் வேதிக் பல்கலைக்கழக துணை வேந்தர் ராணி சதாசிவ மூர்த்தி, முன்னாள் துணை வேந்தர் ஹரிகிருஷ்ணசதபதி, மகளிர் பல்கலைக்கழக துணை வேந்தர் பாரதி மற்றும் பேராசிரியர்கள், மாணவ-மாணவியர் பங்கேற்றனர்.

கவர்னர் திருப்பதிக்கு வந்ததையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகளை போலீஸ் சூப்பிரண்டு பரமேஸ்வர்ரெட்டி, கூடுதல் போலீஸ் சூப்பிரண்டுகள் குலசேகர், விமலகுமாரி, துணை போலீஸ் சூப்பிரண்டுகள் நரசப்பா, நந்தகிஷோர் ஆகியோர் மேற்கொண்டனர்.

### கண்காட்சி

தேசிய சமஸ்கிருத பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறிவியல் தொழில்நுட்பம், பழமையான புத்தகங்கள், கலைப் பொருட்கள், ஓலைச்சுவடிகள் போன்றவை கண்காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தன. அந்தப் பொருட்களை, கவர்னர் அப்துல்நசீர் பார்வையிட்டார்.



தேசிய சமஸ்கிருதப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியில் கவர்னர் அப்துல்நசீர் பார்வையிட்டபோது எடுத்தபடம்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில்